

# வைரல் ஆன சமையல்

நேரடியாக தோசை மட்டுமே சாப்பிட்டால் அசிடிடி வரப் போகிறது என்று இரண்டு தோசையோடு நிறுத்திவிட்டு கதிரேசன் சூப்புப் பக்கம் தன் கவனத்தைத் திருப்பினான். கிருஷ்ணம்மாள் பாட்டி கோவிட் - 19 காரணமாக கோவில் கோவிலாக கும்பிட முடியாமல் குழம்பிப்போய் வீட்டில் அடைபட்டு விட்டார்கள்... கொஞ்சல் நன்றாக தோசை சுடுவாள்.

இப்பொழுது கதிரேசன் தோசை மாவில் அதிகமாகத் தண்ணீர் ஊற்றினால் கொஞ்சல் போலவோ அல்லது அவனுடைய அக்கா பாரதி போலவோ மெல்லிசான முறுகலான தோசை சுட முடியுமா? என்று யோசித்த பொழுது... கிருஷ்ணம்மாளுக்கு... 'சுடாத தோசைக்குத் தேங்க்ஸ்' சொன்ன ஞாபகம் வந்தது...

அது எப்படி சுடாத தோசைக்கு தேங்க்ஸ் சொல்வது?

என்று

கேட்டால் நாம் ஃப்ளாஷ் பேக் போக வேண்டும்.

இது நடந்து சுமார் நாலுமாசம் இருக்கும். அன்னிக்கும் அது பரபரப்பான காலை சமையல் நேரம்தான்....

கதிரேசனுக்கு யார் மனசும் நோகக்கூடாது என்று விருப்பம்.

“நீங்க சுடுற தோசை மொத்தமா இருக்கு... வேண்டாம்”

என்று முகத்திலடித்தாற் போல் சொல்ல முடியாமல் பாட்டியிடம்... கொஞ்சல்... சுடட்டுமே என்றால்...

கிருஷ்ணம்மாள் லேசில் விடமாட்டாங்க.

“சார்...... பாப்பாக்கு ஏன் சிரமம்“?

“வேண்டாம் சார்... பாப்பா... நல்ல சட்டை போட்டுட்டு இருக்கா, அழுக்காயிடும்”

உட்பட

ஏகப்பட்ட சிக்கல்....

அல்லது கொஞ்சம் அசந்த நேரத்தில்...

ஊத்தப்பம் போல ஹாட்பாக்ஸில் வரிசையாக ஃபிளையிங் டிஸ் அகலத்திற்குச் சுட்ட மாவின் மறுவடிவம் அடுக்கி வைக்கப்பட்டுவிடும்.

அடுப்படி தனது சிம்மாசனம்!

தோசைக் கரண்டி தனது செங்கோல்...

என்று கிருஷ்ணம்மாள் பாட்டி நினைக்கிறாங்களோ?

சேப்பாக்கம் பிட்ச் ஸ்பின் பிட்ச், மெல்போர்ன் கிரவுண்டில் பேஸ் எடுபடும். அது மாதிரி இந்தக் கல்லில்... மொத்தமாகத்தான் தோசை எந்திருக்கும்... இதில் நான் அல்ல அந்த

க்ளென் மெக்ரத்தே (**Glenn McGrath**) வந்து மாவு ஊத்துனாலும்!

(அவரு ஏன் மாவு ஊத்தணும் - இது நம்ம மைண்ட் வாய்ஸ்)

அது மொத்தமாகத்தான்... வரும் சார்...

என்று கிருஷ்ணம்மாள் வீட்டிலிருந்த இரண்டு தோசைக் கல்லையும்

'பிட்ச்' சரியில்லை நான் என்ன செய்வது? என்று புதுசு புதுசாகக் காரணம் சொல்வாங்க?

அதையும் தாண்டி.... அன்றைக்கு பாட்டி விட்டுக்கொடுத்துட்டாங்க

அதனால... கொஞ்சலைக் கொண்டுவந்து மாவை ஊற்ற வைத்துவிட்ட வெற்றிக்களிப்பில்... தோசையும் சாப்பிட்ட பிறகு நன்றி நன்றி என்றபொழுது...

என்னாத்துக்கு... சார்... அதான் சொடவே இல்லியே! என்று கிருஷ்ணம்மாள் அங்கலாய்க்க...

சுடாத தோசைக்குத் தாம்மா நன்றி என்றான் கதிரேசன்...

நஸிம் நிக்கோலஸ் தலாப் (Nassim Nicholus Taleb) அவர்களின் கருப்பு அன்னப்பறவை (Black swan) புத்தகத்தில் எட்டாவது அத்தியாயத்தில் இருக்கிற அமைதியான தடயம் (silent evidence) என்கிற கருத்து (concept) ஞாபகம் வந்தது

அந்த ஞாபகம் வந்து போனதும்... மீண்டும் சூப்... பக்கமாக தனது கவனத்தைத் திருப்பினான் கதிர். ஏனென்றால் தூதுவளைச் செடி வீட்டில் உள்ளது... பிரண்டைக் கொடி... கொத்துக் கொத்தாய்ப் படர்ந்துள்ளது...

கிருஷ்ணம்மாளுக்கு பிரண்டை என்றால் அலர்ஜி...

கைகள் பிப்பெடுக்குமாம்...

ஆனால் பிரண்டை எலும்புகளுக்கு வலு கொடுக்குமாம்...

ஆஹா

ஆண்டவன் கொடுத்த வாய்ப்புடா? என்று பிரண்டையை வெட்டிவந்து, இஞ்சி, பூண்டு, தூதுவளை, புதினா, கொத்துமல்லி, சோம்பு, சீரகம், மிளகு... என்று எல்லாவற்றையும் போட்டு... இடித்து... அது பத்தாது என்று ஆடாதொடை நிலவேம்பு போன்ற பதினைந்து மூலிகைகள் அடங்கிய கபசுர பொடியையும் உள்ளே போட்டு அடித்து நசுக்கி அதுக்குள் ஒரு 50 ml நீர் சேர்த்து அப்புறம் காய்ச்சி எடுத்துக் குளிர வைத்து... பின்னர் ஒரு டீ கோப்பையைத் தேடி எடுத்தார் கதிரேசன்.

எந்த சூப் குடிக்கிறோம் என்பதுதான் முக்கியம்... அதை எந்தக் கப்பில் குடிக்கிறோம் என்பதும் கதிரேசனுக்கு முக்கியம்... உலகின்



முனைவர் இரா. ஆனந்தகுமார். இ.ஆ.ப.

மிகச்சிறந்த 'சூப்பை' குடிப்பது போன்றதொரு ஃபீலிங்!

அந்த சூப் கொஞ்சம் கசப்பு... கொஞ்சம் என்னவென்று தெரியாத... சுவைகள் கலந்திருந்தது.

சேர்த்துவிட்டு எழுத மறந்த கருவேப்பிலை காரணமாக இருக்கலாம்...

ஆமாம்...

கொஞ்ச நஞ்ச பொருளா?

சூப்புக்குள் போயுள்ளது.

அன்றைக்கு மதியம் வரை கதிரேசன் நாவில்... சிறுவாணி தண்ணீர் குடித்தால் இனிக்குமே அப்படி ஒரு இனிப்போ... காய்ச்சல் மாத்திரை சாப்பிட்ட பிறகு இருக்குமே... அப்படி ஒரு கசப்போ இருந்ததற்கு... அந்த உலகமகா சூப்தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

அதைத் தொடர்ந்த தோசை தான்... மாட்டிக்கொண்டு மடங்கிக் கிழிந்து... வந்தது... காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு... கதிருக்கும் தன் தோசை பொன் தோசை!

தன் நண்பர் மதியம் பேசும்பொழுது.... அவர் வீட்டில் இருந்து உணவு கொண்டு வருகிறேன் என்றபொழுது... கதிர் அவசரமாக மறுத்தார்...

கொரோனா டைமிங் 21 நாள்... இப்பக்கூட சமையல் செய்யாட்டி எப்போ செய்யப்போகிறோம்? என்பது மட்டும் சமையல் கூறும் நல்லுலகிற்கு... புதுப்புது செய்திகள் கிடைக்காமல் போய்விடுமே! என்கிற ஆதங்கமும் காரணம். கொஞ்சம் கொஞ்சமாக சமையலை நேசிக்கத் தொடங்கியிருந்தான் கதிர்.

வாழிய சமையல்! வாழிய தோசை!

- தொடரும்

**முனைவர் இரா. ஆனந்தகுமார் இ.ஆ.ப**
**தொடர்பு கொள்ள / கருத்து தெரிவிக்க**
**email. tmbkianand@gmail.com**